முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 825

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.01.2022, சனிக்கிழமை

1. அறமெனும் சக்திகொண்ட அரங்கா
ஆறுமுகன் என் சித்தியாக வாழும் தேசிகா
மாறுதலை இந்த கலியுகத்தில் செய்து
மக்களையெல்லாம் ஞானிகள் ஆக்கவே அவதாரம் புரிந்த அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(பிலவ வருடம் மார்கழி மாதம் 17ம் நாள், 01.01.2022 சனிக்கிழமை)
வரமென அரங்கனுக்கு இந்த நன்னாளில் வரம்பல ஆறுமுகன் யான் ஈந்துள்ளேன்
உள்ளபடி அரங்கனுள் சக்தியாற்றல் உலகத்தை காக்கும் மகா சக்தியாக பரவி என்றுஇருக்க
3. இருக்கவே இந்தவித நன்நாளில்
இயம்பிடுவேன் அரங்கன் தொடர்பு கொண்டு
கருத்தாக நயன தீட்சை சிவ தீட்சை கருணைகொண்டு இயக்கும் மக்களுக்கெல்லாம்
எல்லோர்க்கும் ஆறுமுகன் என்னருள் இணையில்லாத மாதவபலமாக வந்து சேரும்
4. சேரவே அரங்கனின் திருவடி பற்றி
சிவ தீட்சை பெற்று அன்னதான சேவையை
அவனியில் செய்கின்ற மக்களெல்லாம்
அரங்கனால் இந்த நன்னாளில் சூட்சுமமாய் ஞானிகளாக தேர்ந்தெடுக்கப்படுவர்
5. தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கெல்லாம்
தேகமனோபலம் தெய்வீக நிலை இன்னும் பெருகி
இனிதே அவனியில் வருகின்ற ஞானயுகமாற்றத்தில்
அன்னவர்களுக்கெல்லாம் பெரும் வாய்ப்பு உறுதியாகும்
6. ஆகவே இந்த சூட்சுமத்தை
அரங்கனுக்கு அருளினேன் இந்தவித நன்னாளில்
யுகமக்களே ஓடி வாருங்கள் பிரணவக்குடிலுக்கு
ஓங்காரன் என் அருள்தவ வரபலத்தை
7. பலத்தை நீங்களெல்லாம் அரங்கன் கரம்பட
பழுதில்லா தீட்சையாக ஏற்றுக்கொண்டு
வளமான வல்லமையான ஞானிகளாக
வருமுலகில் மாற்றங்காண தேடிவாரீர்

8. வாரீர் வாரீர் என அரங்கனுக்கு
வரம் கூட்டுகின்றேன் இன்னும் சூட்சும சக்தியாக
தாரீர் தாரீர் அரங்கன் சேவைவழி
தக்க அவதார நோக்கத்தின் வெற்றிக்காக

9. ஆகவே உயர் தொண்டர் பெருமக்களெல்லாம்
அரங்கன் பேரில் அனுதினம் நாமஜெபம்
யுகமாற்றம் அடைவோம் அடைவோம் என வேண்டி வர
உலகமாற்றம் சடுதி அரங்கன் நோக்கமாக ஆறுமுகன் பூர்த்தி செய்வேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–